# DIET NAMAKKAL

## E CONTENT DEVELOPMENT-BASICS

**SEVEN DAYS VOLUNTARY ONLINE TRAINING FOR TEACHERS**

# DOCUMENTATION

Project coordinator

**E.SIVAPERUMAN**

**LECTURER**

DIET

NAMAKKAL

Project Convenor

**Dr SELVAM**

PRINCIPAL

DIET NAMAKKAL

## மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல்

கோடைக்கால தன்னார்வ ஆசிரியர் திறன்வளர் பயிற்சி
"மின்பாடப் பொருள் மேம்பாடு - அடிப்படைகள் "
தன்னார்வ இணைய வழிப் பயிற்சி

ஆக்கத் தலைமை
முனைவர் மு. செல்வம் முதல்வர், DIET
நாமக்கல்.

திட்டச் செயலர்
திரு. ஏ. சிவபெருமான்,
விரிவுரையாளர்,DIET நாமக்கல்

திட்டக் குழு உறுப்பினர்கள்
அனைத்து கல்வியாளர்கள்,
DIET, நாமக்கல் .

நாள் : 10.5.2024 - 18.5.2024


மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி
நிறுவனம் - நாமக்கல்.
மின் பாடப்பொருள்
மேம்பாடு
7
நாட்கள்
மணிநேரம்
தலைப்புகள்
கருத்தாளர்கள்
(E - Content Development Basics)
சிறிய தொழில்நுட்பம் பெரிய
மாற்றம்
ஒருங்கிணைப்பாளர்
புரவலர்
ஏ.சிவபெருமான்
விரிவுரையாளர், DIET,
நாமக்கல்.
முனைவர் மு.செல்வம்
முதல்வர், DIET,
நாமக்கல்.
நாள்: 10.5.2024 To 18.5.2024
நேரம்: 3:00 pm To 4:00 pm
இணைய வழிப் பயிற்சியில் பங்குபெற புலனத்தில் இணைக

# கோடைக்கால தன்னார்வ ஆசிரியர் திறன்வளர் பயிற்சி
# **"மின்பாடப் பொருள் மேம்பாடு – அடிப்படைகள்"** *( E CONTENT DEVELOPMENT- BASICS)* - இணைய வழிப் பயிற்சி

**வாழ்த்துரை :**

*மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் ஏழு நாள், ஏழு மணி நேரம், ஏழு தலைப்பு, ஏழு கருத்தாளர்கள் என்பதை மையமாகக்கொண்டு இந்த இணையவழி பயிற்சியினை ஒருங்கிணைத்து செயல்படுத்தியது. "சிறியதொழில்நுட்பம் பெரியமாற்றம்" என்ற நோக்கில் இணைய வழி பயிற்சியானது துவங்கப்பட்டது. நாமக்கல் மாவட்ட அனைத்து ஒன்றியங்களில் இருந்தும் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள் இப்பயிற்சியில் பங்குகொண்டு பயனடைந்தனர். **"மின்பாடப் பொருள் மேம்பாடு - அடிப்படைகள்" (E CONTENT DEVELOPMENT- BASICS)** என்ற தலைப்பை ஒட்டி இப்பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலமாக பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கற்றல்-கற்பித்தலில் மின் பாடப்பொருள் எவ்வாறு தயாரிப்பது, அதை எவ்வாறு மாணவர்களுக்கு கொண்டு செல்வது, என்பதைப் பற்றி தெளிவாக இப்பயிற்சியில் கற்றுக் கொண்டனர். புத்தக வடிவில் உள்ள பாடப் பொருளினை இன்றைய நவீன தொழில் நுட்ப கருவிகளைக் கொண்டு அதாவது தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தைப் (ICT) பயன்படுத்தி, இன்றைய வகுப்பறைகளில் செயல்படுத்தி, மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்துவது இந்த பயிற்சியின் நோக்கமாகும்.*

*நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் இருந்து கற்றல்-கற்பித்தலில் நன்கு செயல்படக்கூடிய ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இப்பயிற்சி வழங்கப்பட்டது. இப்பணிமனைக்குக் கருத்தாளராக ICT தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்க கூடியவர்களாக இருக்கும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பள்ளி ஆசிரியர்கள் கருத்தாளராக அழைக்கப்பட்டனர். அவர்கள் சிறப்பாக பயிற்சியினை ஆசிரியர்களுக்கு வழங்கினர். மின்பாடப் பொருள் மேம்பாடு என்ற தலைப்பில் இணைய வழி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பயிற்சியினை வரும் ஜூன் மாதத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் எடுத்து சென்று செயலாக்கம் செய்யப்பட உள்ளனர். இப்பயிற்சி பெற்ற ஒவ்வொரு ஆசிரியரும் இந்த ICT திறன்களைத் தங்களது வகுப்பறையில் செயல்படுத்தி, கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டில் புதிய மேம்பாடு அடையச் செய்து, மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். இந்த இணைய வழி பயிற்சியில் சிறப்பாக பங்கு கொண்ட அனைத்து ஆசிரியர்களுக்கும், சான்றிதழ் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 624 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.*

*இத்திட்டத்தினைச் செயலாக்கம் செய்த திட்டச் செயலர் திரு. ஏ. சிவபெருமான், விரிவுரையாளர்,* DIET, *நாமக்கல், அவர்களையும், திட்ட குழு உறுப்பினர்களான அனை கல்வியாளர்களையும் வாழ்த்துகிறேன். அனைத்து கருத்தாளர் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இது போன்ற தகவல் தொடர்பு தொழில்நுட்பம், கல்வி தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளை இனிவரும் காலத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு முன்னெடுக்கும்படி வாழ்த்துகிறேன்.*

**DIET –NAMAKKAL**

**Information and Communication Technology in Education- ICTE**

**Online Voluntary Training Programme Topic: *"E-CONTENT DEVELOPMENT BASICS"***

**ICTE -Resource Persons Details and Their Handling Session's Topics Details**

| S.no | Date | Time | Name Of The Resource Person | Handing Online Training Topic |
|---|---|---|---|---|
| 1 | 10.5.2024 | 3pm to 4pm | ELAVARASAN R<br>GRADUATE TEACHER (MATHS),<br>PANCHAYAT UNION MIDDLE SCHOOL -VEDAPATTI,<br>AYOTHYIAPTTINAM BLOCK,<br>SALEM DT-636122 | PHOTO STORY |
| 2 | 11.5.2024 | 3pm to 4pm | ARUMUGAM M<br>GRADUATE TEACHER IN ENGLISH<br>PUMS SCHOOL,<br>VENGIPALAYAM - 637 304.<br>SANKARI TK.<br>THARAMANGALAM EDNL DIST.<br>SALEM DT. | CREATION OF DIGITAL POSTERS |
| 3 | 12.5.2024 | 3pm to 4pm | PRABHAKARAN M<br>SGT, PUPS, PALLIKONDANPARAI,<br>THARAMANGALAM BLOCK,<br>SALEM DIST - 636502 | FINDING COPYRIGHT FREE IMAGES / SOUNDS |
| 4 | 13.5.2024 | 3pm to 4pm | VIJAYAKUMAR M<br>BT in English,<br>GHSS Somandargudi,<br>Kallakurichi Dt | STOP MOTION ANIMARTION |
| 5 | 14.5.2024 | 3pm to 4pm | GURU A<br>BT Asst Maths,<br>PUMS- Adimalaipatti ,<br>Panamarathupatti union ,<br>Salem 636203 | ANIMATING BASIC MOVEMENTS |
| 6 | 17.05.2024 | 3pm to 4pm | Dr SANTHALAKSHMI G<br>Graduate teacher,<br>GHSS,<br>Dasanaickenpatti,<br>Salem<br>9994418781<br>Santhalakshmiteacher@gmail.com | LOOP ANIMATION USING PPT |
| 7 | 18.5.2024 | 3pm to 4pm | THANGARAJA M<br>SG Teacher<br>Panchayat union middle school,<br>Parappatti,<br>Panamarathupatti block,<br>Salem.<br>raaja23may@gmail.com | CREATION OF ANIMATED STORY |

**நோக்கம் :**

1. *Photo Story, Kinemaster, Quik* செயலி மூலமாக புகைப்படங்களை வீடியோக்களாக, இசைவடிவில் மாற்றி வகுப்பறை கற்பித்தலில் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

2. *Canva* இணையம் வழியாக டிஜிட்டல் போஸ்டர்களை உருவாக்கி அதை எவ்வாறு கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

3. *படைப்பாக்கப் பொது உரிமம் (Creative Commons), அதன் வகைகள் பற்றி பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.*

4. *Google கூகுளில் இருந்து எவ்வாறு பதிப்புரிமை இல்லாத படங்களைப் பெறலாம் என்பதைப் பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.*

5. *Bing image, Pikwizand, pexels, Unsplash, Pixabay* போன்ற இணையங்களிலிருந்து எவ்வாறு பதிப்புரிமை இல்லாத படங்களைப் பதிவிறக்கம் செய்து கற்றல் கற்பித்தலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

6. *Mixkit.co, zapsplat.com., free sound.org., freesfx.co.uk* போன்ற இணையங்களிலிருந்து பதிப்புரிமைப் பிரச்சனை இல்லாமல் *(Copyright free sounds)* ஒலி, இசை, வீடியோக்களைப் பதிவிறக்கம் செய்வது பற்றி நேரடி பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

7. *Stop motion studio* மொபைல் போன் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் *Stop motion animation* பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

8. நகர்வுப்படத்தின் *(Animation)* வகைகள், *3D Animation software,* கோப்பின் வகைகள் ஆகியவை பற்றி விளக்கமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

9. *PPT* மூலமாக நகர்வுப் படத்தினைத் தயார் செய்யும் விதம் பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

10. *Loop Animation Using PPT* என்ற தலைப்பில், *PPT* மூலம் எவ்வாறு அசைவூட்டல் படங்களைத் தயாரிக்கலாம் என்பதை பற்றி ஆசிரியர்களுக்கு செய்முறை விளக்கம் அளித்து பயிற்சி அளித்தல்.

11. *PPT* மூலமாக அசைவூட்டல் படங்களைத் தயாரிக்கும் விதம் பற்றியும், *PPT* பின்னணி இசைக்கோப்புகளைச் சேர்த்து அசைவூட்டப்பட்ட கதைகளைத் *(Animated Story)* தயாரித்தல் பற்றியும் ஆசிரியர்களுக்கு செய்முறை விளக்கம் அளித்து பயிற்சி அளித்தல்.

### செயல்படுத்திய விதம் :

*நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களில் இருந்தும் 280 ஆசிரியர்கள் ICTE-INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY IN EDUCATION என்ற புலன குழுவில் சேர்க்கப்பட்டனர். இந்த புலனக்குழு வாயிலாக ஜூம் இணைப்பு (ZOOM link),* வலையொளி *இணைப்பு (YOUTUBE Link), பயிற்சி முடிந்த பின் ஆசிரியர்களை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட கூகுள் படிவம் (Google Form) ஆகியவை இப்புலனக் குழுவில் பகிரப்பட்டது. ஏழு நாள் இணையவழி பயிற்சியில் ஒவ்வொரு நாளும் கருத்தாளரால் வழங்கப்படுகின்ற அன்றைய தின இணைய வழி பயிற்சியின் செயல்பாடுகளை ஒப்படைவாக கூகுள் படிவம் மூலம் செய்து அனுப்பும்படி ஆசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு பூர்த்தி செய்து*

*அனுப்பப்பட்ட பதிவுகள் ICTE புலன குழுவில் அந்தந்த கருத்தாளர்கள் பின்னூட்டம் அளித்து இணைய வழி பயிற்சி செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு ஆசிரியர்களின் ICT திறன் மேம்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 120 ஆசிரியர்கள் இணைவழிப் பயிற்சியில் பங்கேற்றனர். இதில் ZOOM இணைப்பு மூலமாக 100 ஆசிரியர்களும் DIET நாமக்கல் வலையொளி (YouTube) சேனல் நேரடி ஒளிபரப்பு மூலமாக 30 ஆசிரியர்களும் பங்கேற்றனர். இந்த ஏழு நாள் இணைய வழி பயிற்சி மதியம் மூன்று மணியிலிருந்து நான்கு மணி வரை நடைபெற்றது. இந்த இணையவழி பயிற்சியினை ஒவ்வொரு நாளும் துவக்கி வைக்க, DIET கல்வியாளர்கள் அழைக்கப்பட்டு ஒவ்வொரு நாள் இணைய வழி பயிற்சியினைத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினர்.*

***நாள் 1 : 10.5.2024*** ***" Photo Story "***

*Zoom link , DIET NAMAKKAL வலையொளி (YouTube) live Link, Google forms, நிகழ்ச்சி நிரல் ஆகியவை மின்பாடப் பொருள் மேம்பாடு (* E Content Development - Basics *) இணையவழிப் பயிற்சிக்கு தயார் செய்யப்பட்டது. இணையவழிப் பயிற்சியில் ICTE புலனக் குழுவில் 240 ஆசிரியர்கள் பங்கேற்பாளர்களாக இணைந்தனர். இன்றைய முதல் நாள் இணையவழிப் பயிற்சியில் கருத்தாளராக திரு. R. இளவரசன் , பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வேடப்பட்டி, அயோத்திப்பட்டிணம் (Block), சேலம் மாவட்டம், அவர்கள் **"Photo Story"** என்ற தலைப்பில் இணையவழி பயிற்சி நடத்தப்பட்டது. Zoom இணைப்பு வழியாக 100 பேரும், வலையொளி (YouTube) இணைப்பு வழியாக 25 பேரும் பங்கேற்றனர். Photo Story – என்ற Microsoft- photo-story.en.uptodown.on என்ற இணையம் வழியாக கற்பிக்கப்பட்டது. Kinemaster செயலி வழியாகவும், Quik செயலி மூலமாகவும் புகைப்படங்களை வீடியோக்களாக, இசைவடிவில் மாற்றி வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்த ப சிறந்த முறையில் வழங்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் கூகுள் படிவம் ICTE புலனக்குழுவில் (ICTE whatsapp group) பகிரப்பட்டு இன்றைய நாளுக்குரிய ஒப்படைவுகளை பதிவேற்றம் செய்யும்படி ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். சிறப்பாக ஆசிரியர்கள் தாங்கள் தயார் செய்த Photostory, Quik app, Kinemaster போன்ற செயலிகள் மூலம் தயார் செய்யப்பட்ட வீடியோகளைப் ICTE புலனக்குழுவில் பகிர்ந்தனர். இணையவழிப் பயிற்சி இன்றைய முதல் நாள் இணையப்பயிற்சியினைத் துணை முதல்வர் முனைவர் க. அமீருன்னிசா அவர்கள் துவக்கி வைத்தார். வரவேற்புரை விரிவுரையாளர் திரு. ஏ. சிவபெருமான் அவர்கள் வழங்கினார். தேசிய தகவல் தொழில்நுட்ப விருது பெற்ற கருத்தாளர்*

*திரு. R. இளவரசன் பட்டதாரி ஆசிரியர் அவர்கள் பயிற்சி வழங்கினார். பின்னர் நன்றியுரை விரிவுரையாளர் திரு. ஏ. சிவபெருமான் அவர்கள் வழங்கினார்.*

***நாள் 2 : 11.5.2024 "Creation of Digital Posters"***

*நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப் பயிற்சி "மின்பாடப் பொருள் மேம்பாடு"* E Content Development-Basics ) *என்ற தலைப்பில் இரண்டாம் நாள் பயிற்சியான இன்று "**டிஜிட்டல் விளம்பர பாதாகைகள் தயாரித்தல்" (Creation of Digital Posters)** என்ற தலைப்பில் M . ஆறுமுகம் I can Awardee, Microsoft Innovative Educator Expert- விருதாளர், பட்டதாரி ஆசிரியர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வெங்கிபாளையம், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் அவர்கள் பயிற்சியினை நடத்தினார். இவ்விணையப் பயிற்சி இரண்டாம் நாளன் ஜூம் செயலி (Zoom link) இணைப்பு வழியாக 100 பேரும், வலையொளி (YouTube) சேனல் நேரடி ஒளிபரப்பு மூலமாக 20 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக திரு. ஏ. சிவபெருமான் விரிவுரையாளர் செயல்பட்டார். இவர் இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்கி அனைவரையும் வரவேற்றார். இன்றைய நாளின் இணையப் பயிற்சியினைத் துவக்கி வைத்து கருத்தாளரைப் பற்றி அறிமுகம் செய்து வாழ்ந்துரை வழங்கியவர் முனைவர் திருமதி மா. சந்தோஷம், முதுநிலை விரிவுரையாளர் அவர்கள். டிஜிட்டல் விளம்பர பதாகைகள் தயாரித்தல் (Creation of Digital Posters) என்ற தலைப்பில் ஆசிரியர்களுக்கு சிறந்த முறையில் திரு. ஆறுமுகம் ஆசிரியர் – கருத்தாளர் அவர்கள் பயிற்சியினைச் சிறந்த முறையில் வழங்கினார். Canva இணையம் வழியாக (லேப்டாப் மூலம்) டிஜிட்டல் போஸ்டர்களை உருவாக்கி அதை எவ்வாறு கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி கருத்தாளர் அவர்கள் சிறப்பாக விளக்கினார். அதேபோன்று Canva செயலி வழியாக, ஆண்ட்ராய்டு போன்மூலம் எவ்வாறு போஸ்டர் தயாரிக்கலாம் என்பதைப் பற்றியும் சிறப்பாக விளக்கி பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் ஒப்படைவுகள் கூகுள் படிவம் மூலம் பெறப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர் சேர்க்கைப் பற்றி போஸ்டர்கள், பல்வேறு தலைப்புகளில் போஸ்டர்கள் உருவாக்கி புலனக் குழுவிலும், கூகுள் படிவத்தில் (Google form) பதிவேற்றம் செய்தனர். அதைப் பாராட்டி, அதில் திருத்தங்கள் குறித்த தெளிவுரைகளைக் கருத்தாளர் அவர்கள் வழங்கினார்கள்.*

***நாள் 3 : 12.5.2024 "Copyright Free Images and Sounds"***

*நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப்பயிற்சியானது "மின்பாடப்பொருள் மேம்பாடு -அடிப்படைகள் (Econtent Development-Basic)" என்ற தலைப்பில் மூன்றாம் நாள் இணைய வழிப் பயிற்சியில் வரவேற்புரை திரு. ஏ. சிவபெருமான்*

விரிவுரையாளர் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. திரு. முத்துக்கிருஷ்ணன் முதுநிலை விரிவுரையாளர் அவர்கள் கருத்தாளர் அவர்களை முகவுரை அளித்து வாழ்த்துரை வழங்கினார். *ICTE* புலனக்குழுவில் 288 பேர் இணைந்துள்ளனர். ஜூம் செயலி *(Zoom app)* வழியாக 100 பங்கேற்பாளர்களும், வலையொளி (YouTube) வழியாக இருபது பேரும் பங்கேற்றனர். இன்றைய கருத்தாளர் திரு. *M* . பிரபாகரன் இடை நிலை ஆசிரியர். பள்ளிக் கொண்டான் பாறை, தாரமங்கலம் (ஒன்றியம் ) சேலம் மாவட்டம் அவர்கள் ***"Copyright Free Images and Sounds"*** "பதிப்புரிமை இல்லாத படங்கள் மற்றும் ஒலிகள்" என்ற தலைப்பில் இணையப் பயிற்சியினைச் சிறந்த முறையில் வழங்கினார். இதில் படைப்பாக்க பொது உரிமம் *(Creative Commons)*, அதன் வகைகள் பற்றி பயிற்சி வழங்கினார். *Google* இலிருந்து எவ்வாறு பதிப்புரிமை இல்லாத படங்களைப் பெறலாம் என்பனவற்றையும், *Bing image, Pikwizand, pexels, Unsplash, Pixabay* போன்ற இணையங்களிலிருந்து எவ்வாறு பதிப்புரிமை இல்லாத படங்களைப் பதிவிறக்கம் செய்து நமது கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி சிறப்பாக விளக்கினார். பதிப்புரிமைப் பிரச்சனை இல்லாமல் *(Copyright free sounds)* ஒலி, இசை, வீடியோக்களைப் பதிவிறக்கம் செய்வது பற்றி *mixkit.co, zapsplat.com., free sound.org., freesfx.co.uk* போன்ற இணையங்களிலிருந்து இசையைப் பதிவிறக்கம் செய்து நேரடி பயிற்சிகளை வழங்கினார். கூகுள் படிவம் *(Google form)* மூலம் பதிப்புரிமைச் கோரப்படாத படங்கள், இசைகளைப் பதிவேற்றம் செய்யும்படியான ஒப்படைவு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, பின்னூட்டம் வாயிலாக அவர்களின் செயல்பாடு மேம்படுத்தப்பட்டது.

***நாள் 4 : 13.5.2024 "Stop Motion Animation"***

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப்பயிற்சியானது " மின்பாடப்பொருள் மேம்பாடு அடிப்படைகள்" மூன்றாம் நாள் இணையவழிப் பயிற்சிக்குத் தேவையான ஜூம் செயலி *(Zoom app)*, வலையொளி *(YouTube) live* இணைப்பு தயார் செய்யப்பட்டது. இன்றையப் பயிற்சியை வழங்கியவர் திரு. *M.* விஜயகுமார் பட்டதாரி ஆசிரியர் *GHSS*-சோமந்துார்குடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆவார். இன்றைய இணையவழிப் பயிற்சியின் தலைப்பு ***"Stop Motion Animation"*** ஆகும். இந்த நான்காம் நாள் இணையவழிப் பயிற்சிக்கு வரவேற்புரை திரு. ஏ. சிவபெருமான் விரிவுரையாளர் அவர்கள் வழங்கினார். இன்றைய நாளின் இணையவழிப் பயிற்சியினை முனைவர் கா. சையத் முஸ்தபா, முதுநிலை விரிவுரையாளர் அவர்கள். துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். *Stop motion studio* மொபைல் போன் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் *Stop motion animation* பயிற்சி சிறந்த முறையில் வழங்கப்பட்டது. *Stop motion animation* பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களை மதிப்பிட கூகுள் படிவம் *(Google form)* அளித்து, அதன் வழியாக அவர்கள் படைப்புகளைப் பதிவேற்றம் செய்ய பணிக்கப்பட்டது. ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கு அவ்வப்போது கருத்தாளர்கள் தெளிவான பதில்கள் வழங்கினார்கள். ஆசிரியர்கள் ஜூம் செயலி *(Zoom APP)* வழியாக 90 பேரும் வலையொளி *(YouTube)* சேனல் நேரடி ஒளிபரப்பு மூலமாக வழியாக 10 பேரும் பங்கேற்றனர்.

***நாள் 5 : 14.5.2024 "Animating Basic movements"***

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப்பயிற்சியானது " மின்பாடப்பொருள் மேம்பாடு-அடிப்படைகள்" என்ற தலைப்பை ஒட்டி இப்பயிற்சி வழங்கப்பட்டது. ஐந்தாம் நாள் இணையவழிப் பயிற்சியின் கருத்தாளர் திரு. *A.* குரு பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி , அடிமலைப்பட்டி, பனமரத்துப்பட்டி ஒன்றியம், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவர். இவர் *TN SCERT Epub* படைப்பாளர், வீடியோ மொழிபெயர்ப்பாளர், *TN SCERT Hi tech lab State Master Resource person, RMSA Joyful Maths Author* ஆவார். கருத்தாளர் திரு. *A.* குரு பட்டதாரி ஆசிரியர் அவர்கள் ***"Animating Basic movements"*** என்ற தலைப்பில் சிறந்த முறையில் கற்பித்தார்.

வரவேற்புரை திரு. ஏ. சிவபெருமான், விரிவுரையாளரால் நிகழ்த்தப்பெற்றது. திரு. பெ. சின்னாக்கவுண்டர், முதுநிலை விரிவுரையாளர் அவர்கள் இன்றைய பயிற்சி வகுப்பினைத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். இதில் நகர்வுப்படத்தின் (Animation) வகைகள், 3D Animation software, கோப்பின் வகைகள் ஆகியவை விளக்கமாக பயிற்சியளித்தார். PPT ( MS 2019 ) மூலமாக நகர்வுப் படத்தினைத் தயார் செய்யும் விதத்தைக் கற்பித்தார். ஆசிரியர்களை மதிப்பிட கூகுள் படிவம் பகிரப்பட்டு செயல்பாடுகள், ஒப்படைவுகள் பெறப்பட்டது.

***நாள் 6: 17.5.2024 “ Loop Animation Using PPT”***

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப்பயிற்சியானது “ மின்பாடப்பொருள் மேம்பாடு-அடிப்படைகள்” ஆறாம் நாள் இணையவழிப் பயிற்சியின் கருத்தாளர் முனைவர் திருமதி சாந்தலட்சுமி Design for Change, Teachers Excellence, Nation Builder Award 2018, விருதாளர் அவர்கள் **“Loop Animation Using PPT”** என்ற தலைப்பில் இணையவழிப்பயிற்சியினைச் சிறந்த முறையில் அளித்தார். PPT மூலம் எவ்வாறு அசைவூட்டல் படங்களைத் தயாரிக்கலாம் என்பதை மேற்காண் கருத்தாளர் அவர்கள் செய்முறை விளக்கம் அளித்து கற்பித்தார். இன்றையத் தன்னார்வ இணையவழிப் பயிற்சியில் ஜூம் செயலி (Zoom APP) இணை மூலம் 68 ஆசிரியர்களும், வலையொளி ( YouTube ) வழியாக 14 அசிரியர்களும் இணையவழியாக இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டனர். நமது நிறுவன முதல்வர் அவர்கள் இன்றைய இணையவழிப்பயிற்சியினைத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். நன்றியுரை திரு. ஏ. சிவபெருமான் அவர்களால் வழங்கப்பட்டது.


***நாள் 7 : 18.5.2024 “Creation of Animated Story”***

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் தன்னார்வ இணையப்பயிற்சியானது “மின்பாடப்பொருள் மேம்பாடு அடிப்படைகள்” ஏழாம் நாள் இணையவழிப் பயிற்சியின் கருத்தாளர் திரு M. தங்கராஜ் அவர்கள் **“Creation of Animated Story”** என்ற தலைப்பில் பயிற்சியினைச் சிறந்த முறையில் வழங்கினார். National ICT Award from Ministry of Education, Best Animator Award from NCERT, Best contributor Award from DIKSHA, Nation Builder Award ஆகிய விருதுகளைக் கருத்தாளர் M. தங்கராஜ் அவர்கள் பெற்றுள்ளார். PPT மூலமாக அசைவூட்டல் படங்களைத் தயாரிக்கும் விதம் பற்றி கருத்தாளர் திரு M. தங்கராஜ் அவர்கள் சிறப்பாக கற்பித்தார். PPT பின்னணி இசைக்கோப்புகளைச் சேர்த்து அசைவூட்டப்பட்ட கதைகளைத் (Animated Story) தயாரித்தல் பற்றிச் சிறப்பாக கற்பித்தார். இந்நிகழ்ச்சியை திரு. கோ. வேதராஜ பால்சன் விரிவுரையாளர் அவர்கள் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர்கள் ஜூம் செயலி (Zoom APP) வழியாக 67 பேரும் வலையொளி (YouTube) சேனல் நேரடி ஒளிபரப்பு மூலமாக வழியாக 10 பேரும் பங்கேற்றனர். நன்றியுரை திரு. ஏ. சிவபெருமான் அவர்களால் வழங்கப்பட்டது.

**பயனாளிகள் :**


நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து கல்வி ஒன்றியங்களில் இருந்து இடைநிலை ஆசிரியர்கள் , பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய 130 ஆசிரியர்கள் இப்பணிமனையில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.



மின் பாடப்பொருள் மேம்பாடு
இன்றைய தலைப்பு மற்றும் கருத்தாளர்
PHOTO STORY
R.இளவரசன்
ICT தேசிய விருதாளர்
அயோத்தியாபட்டிணம், சேலம்.


DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING, NAMAKKAL
ICTE
E-CONTENT DEVELOPMENT BASICS
Day 2
11-05-2024
CREATION OF DIGITAL POSTERS
Presenter
ARUMUGAM M
GRADUATE TEACHER
PUMSCHOOL,
VENGIPALAYAM
SANKARI TK. SALEM DT.
Meeting
live
zoom
You Tube
3:00 PM


DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING, NAMAKKAL
ICTE E-CONTENT DEVELOPMENT BASICS
DAY 3
12-05-2024
Finding copyright free images /sounds
Presenter
PRABHAKARAN M
SGT, PUPSCHOOL
PALLIKONDAN PARAI
THARAMANGALAM BLOCK
SALEM DT - 636 502.
Meeting
live
zoom
You Tube
3:00 PM



DIET - NAMAKKAL
ICTE - WORKSHOP
E - Content Development - Basics!
Day 4
13 MAY
03.00 PM
STOP MOTION ANIMATION
M. Vijayakumar,
English Graduate Teacher,
GHSS - Somandargudi.
Kallakurichi district.
JOIN US !
zoom


Basics of Animation
14 May 03.00PM
A.Guru
BT.Asst
PUMS-Adimaaipatti
Salem



DIET- NAMAKKAL
ICTE - WORKSHOP
E-Content Development-Basics...
Loop Animation Using PPT
Dr. G.Santhalakshmi,
Graduate Teacher,
GHSS, Dasanaickenpatti,
Salem-636201.
Day 6
17.05.2024
3.00 pm
JOIN & LEARN


Date: 18.05.2024
Time: 3.00 pm
CREATION OF ANIMATED STORY
Thangaraja M.
SG Teacher,
PUMS Parappatti,
Panamarathupatti block,
Salem Dt.


Girl
Pond
Fish
zoom


DIET NAMAKKAL-ICTE-e-CONTENT DEVELOPMENT BASIC
DIET Namakkal
1:13:21 / 1:41:35
More videos
From left tape from right to from top. One by


Galaxy F23 5G


Completing Photo Story 3 for Windows
zoom


zoom


zoom


zoom



zoom
zoom


zoom


zoom


DIET NAMAKKAL - e- CONTENT DEVELOPMENT BASICS
Arumugam M
16:02 / 1:25:46
More videos


Galaxy F23 5G


REC
LIVE
vivo V2153
K.sarathi
selvarani c
Pums Thirumalaigiri
GOWRI S
Poornima devi
Santhi salem